- **அறிவித்தல்** -

**மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு தென் மாகாணம்**

**தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தர் (உயிர் சுகாதார) III ஆம் தரம்/பயிலுநர் தரப் பதவிக்கு ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025**

1.0 தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தர் (உயிர் சுகாதார) III ஆம் தரப் பதவிக்கு ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை, தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் **2025 நவம்பர/டிசம்பர்** மாதங்களில் நடாத்தப்படவுள்ளமையை இத்தால் அறியத்தருகின்றோம். அதற்கான விண்ணப்பப்படிவம் தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் **www.psc.sp.gov.lk** இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பப்படிவம் இணையவழி (Online) ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் இறுதித் திகதி **2025 ஒக்றோபர் மாதம் 24 ஆம் திகதி** ஆகும்.

**குறிப்பு 01 :- இணையவழி மூலமாக விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் திகதி 2025 ஒக்றோபர் மாதம் 03 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படுவதுடன், 2025 ஒக்றோபர் 24 ஆம் திகதி பி.ப 6.00 மணியுடன் முடிவடையும்.**

இப்பரீட்சை காலி நகரில் அமைந்துள்ள பரீட்சை நிலையத்தில் மாத்திரமே நடாத்தப்படவுள்ளது. இணைவழி மூலமாக விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யும் போது பரீட்சைக்குத் தோற்றும் நகரமாக காலி நகரத்தைத் தெரிவு செய்தல் வேண்டும்.

2.0 தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவால் நடாத்தப்படும் எழுத்துமூல பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய திறன் அடிப்படையிலான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளில், தொழிநுட்ப உத்தியோகத்தர் (உயிர் சுகாதார) III ஆம் தரப் பதவிக்கு/ பயிற்சி பெற்ற தரப் பதவி நியமனத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

3.0 **(அ) நியமிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 03 ஆகும்.**

(ஆ)நியமிக்கப்படும் எண்ணிக்கை நியமனம் செயல் வலுவுக்கு வரும் திகதி நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். ஏதேனுமொரு வெற்றிடம் அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நியமிக்காமல் இருப்பதற்கும் நியமிப்புச் செய்யும் அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

(இ) அரச சேவையில் நியமனங்கள் நிர்வகிக்கப்படும் பொதுவான நிபந்தனைகளுக்கும், இலக்கம் 293 மற்றும் 2019.04.10 திகதிய தென் மாகாண கௌரவ ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்ட தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தர் (உயிர் சுகாதார) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நடபடிமுறைகளில் விதிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், குறித்த நடபடிமுறைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது பின்னர் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குகள/தென்மாகாண நிதி ஒழுங்குவிதிகளுக்கும், இலக்கம் 2310/29 ஆம் இலக்க மற்றும் 2022.12.14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் இணங்கி தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் தொழிநுட்ப உத்தியோகத்தர் (உயிர் சுகாதார) III ஆம் தரப் பதவிக்கு/பயிலுநர் தரப் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

(ஈ) பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் முதலாவது நியமனம் கிடைத்த சேவை இடத்தில் குறைந்தபட்சம் மூன்று (03) ஆண்டுகள் பணியாற்றுதல் கட்டாயமாகும். ஆயினும், நியமிப்புச் செய்யும் அதிகாரியால் தீர்மானிக்கின்ற ஏதேனுமொரு விசேட காரணத்தின் அடிப்படையில், குறித்த காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னரே ஏதேனுமொரு அலுவலரை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பின், நியமிப்புச் செய்யும் அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

(உ) இந்நியமனம் மூன்று ஆண்டுகள் நன்னடத்தை தகுதிகூர் நிலைக் காலத்தைக் கொண்டிருக்கும். தொழிநுட்ப உத்தியோகத்தர் (உயிர் சுகாதார) ஐஐஐ ஆம் தரப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்து மூன்று (03) ஆண்டுகளுக்குள் சேவைப் பிரமாணக் குறிப்புக்களில் குறிப்பிட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(ஊ) பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் நீங்கள் நியமனத்திற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மொழிக்கமைய, 2020.10.16 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதனுடன் இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய, அரச கரும மொழிகள் தேர்ச்சியைப் பூர்த்தி செய்தல் வேண்டும். மேலும் மொழித் தேர்ச்சி தொடர்பாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நடபடிமுறைகளின் ஏற்பாடுகளும் உள்ளடங்கும்.

**4.0** சம்பளம் :

(அ) III ஆம் தரப் பதவி நியமனத்திற்கு ஏற்புடைய சம்பளம்

2025.03.25 ஆம் திகதிய மற்றும் 10/2025 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் MN – 03 சம்பளக் குறியீடு இப்பதவிக்கு ஏற்புடையதாவதுடன், சம்பள அளவுத்திட்டம் 52,250 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320 - 10 x 1,350 - 100,040/- ஆவதுடன், குறித்த சம்பளம் 2027.01.01 தொடக்கம் கிடைக்கும். நியமனம் செயல்வலுவுக்கு வரும் திகதி தொடக்கம் இச்சுற்றறிக்கையின் III ஆம் இட்டவணையின் ஏற்பாடுகளுக்கமைய சம்பளம் செலுத்தப்படும்.

(ஆ)) மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கமைய, தென் மாகாண தொழிநுட்ப சேவையின் பயிலுநர் தரத்திற்கு ஏற்புடைய மாதாந்தக் கொடுப்பனவு கீழ்வருமாறு அமையும்.

| **வருடம்** | **மாதாந்தக் கொடுப்பனவு** | | |
|---|---|---|---|
| | 2025.04.01 திகதி தொடக்கம் (ரூ.) | 2026.01.01 திகதி தொடக்கம் (ரூ.) | 2027.01.01 திகதி தொடக்கம் (ரூ.) |
| 1 வருடம் | 41,317.00 | 43,274.00 | 45,230.00 |

**5.0** தென்மாகாண தொழிநுட்ப உத்தியோகத்தர் (உயிர் சுகாதார) III ஆம் தரப் பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதியத்துடன் கூடியது. இப்பரீட்சை மூலம் தொழிநுட்ப உத்தியோகத்தர் (உயிர் சுகாதார) III ஆம் தரப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்கு இப்பதவிக்கு உரித்தான ஓய்வூதியத்திட்டம் தொடர்பாக அரசால் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

**குறிப்பு 02** :- பயிற்சி பெற்ற தரத்திற்கு சேர்க்கப்படும் விண்ணப்பதாரிகள் குறித்த ஆட்சேர்ப்பு நடபடிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பயிற்சிக் காலத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்னர், தென்மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவால் நடாத்தப்படும் பரீட்சையில் தேர்ச்சி பெற்றுள்ளதாக வழங்கப்படும் சான்றிதழை சமர்ப்பித்த பின்னர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையை சித்தியடைய தவறும் பயிலுநர்கள் இருப்பதாயின் அவர்களுக்கு 06 மாதத்தை விட அதிகமாகாத காலத்திற்காக தங்களுடைய பயிற்சி காலத்தை நீடித்துக்கொள்ள சந்தர்ப்பம் உண்டு. அவ்வாறு நீடித்துக்கொள்ளப்படும் கால எல்லையின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையை தோல்வியடையும் திறந்தவெளியின் கீழ் விண்ணப்பித்த பயிலுநர்களின் சேவையை முடிவடைக்கப்படும்.

**6.0 தகைமைகள்** :- தென்மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தர் (உயிர் சுகாதார) III ஆம் தரப் பதவிக்கு/பயிலுநர் தரப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக கீழ்க்குறிப்பிட்டுள்ள தகைமைகளை விண்ணப்பக் கோரல் செய்யப்படும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

**6.1 III ஆம் தரம்**

**(அ). கல்வித் தகைமைகள் :-**

துறைசார் பாடங்கள் இரண்டுடன் கூடிய விஞ்ஞானம்/கணிதம்/தொழிநுட்பவியல் பாடத்துறைகளுக்குரிய பாடங்கள் மூன்றில் க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் கூடியதாக ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**(ஆ). தொழில் தகைமைகள் :-**

I. மொரட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி உயர் தொழிநுட்பவியல் கல்வி நிறுவகத்தால் வழங்கப்படும் தேசிய தொழிநுட்பவியல் டிப்ளோமா

அல்லது

II. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞானம் தேசிய (மின்/இலத்திரனியல்) டிப்ளோமா

அல்லது

III. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் தொழிநுட்ப (மின்/இலத்திரனியல்) டிப்ளோமா

அல்லது

vi. கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சால் வழங்கப்படும் பொறியியல் (மின்/இலத்திரனியல்) டிப்ளோமா

அல்லது

v. தொழில் துறைக்கு ஏற்புடையதான தொழிற் திறன் NVQ 6 ஆவது மட்டத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

vi. இலங்கை பொறியியல் நிறுவகத்தால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் 1 ஆம் பகுதியைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

vii. இலங்கை தொழிநுட்ப சேவைகள் சபை அல்லது தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கக்கூடிய மேற்குறிப்பிட்ட தொழிநுட்த் தகைமைகளுக்குச் சமமான அல்லது உயர்வான தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**6.2 பயிலுநர் தரம் (ஓராண்டு பயிற்சிக்காலம்)**

**(அ). கல்வித் தகைமைகள் :-**

துறைசார் பாடங்கள் இரண்டுடன் கூடிய விஞ்ஞானம்/கணிதம்/தொழிநுட்பவியல் பாடத்துறைகளுக்குரிய பாடங்கள் மூன்றில் க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் கூடியதாக ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**(ஆ). தொழில்சார் தகைமைகள் :-**

i. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழிநுட்பவியல் கல்லூரியொன்றின் பதவிக்குரிய துறைசார் பாடநெறியொன்றைப் பயின்று பெற்றுக் கொண்ட தொழிநுடபவியல் சான்றிதழைப் பெற்றிருத்தல் (உதாரணமாக: தேசிய தொழிநுட்ப சான்றிதழ் - மின்/இலத்திரனியல்)

அல்லது

ii. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழிநுட்பவியல் கல்லூரியொன்றின் பதவிக்குரிய துறையில் கைத்தொழில் தொழிநுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ் பாடநெறியைப் பூர்த்தி செய்து சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

iii. இலங்கை தொழிநுட்ப சேவைகள் சபை அல்லது தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கக்கூடிய மேற்குறிப்பிட்ட தொழிநுட்த் தகைமைகளுக்குச் சமமான அல்லது உயர்வான தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு 03 :-**

(i). III ஆம் தரத்திற்கு நேரடியாக ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் போன்ற இரண்டு முறைகளிலும் ஆட்சேர்ப்புச் செய்யும் போது, ஆட்சேர்ப்புச் செய்யும் தரமான III ஆம் தரத்திற்கு முதலாவதாக ஆட்சேர்ப்புச் செய்தல் வேண்டும்.

(ii). III ஆம் தரத்திற்கு தகைமை பெறுகின்ற விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குப் போதியளவு இல்லாதவிடத்து, எஞ்சிய வெற்றிடங்களுக்காக பயிலுநர் தரத்திற்கு ஏற்புடைய தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற விண்ணப்பதாரிகள் பயிலுநர் தரத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

6.3 **அனுபவங்கள்** :- ஏற்புடையதல்ல

6.4 **வயது** :- விண்ணப்பப் படிவங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு, அதாவது 2025.10.24 அன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய, 2007.10.24 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னரும் மற்றும் 1995.10.03 ஆம் திகதிக்கு அல்லது அதற்குப் பின்னரும் பிறந்த தினத்தைக் கொண்டவர்களுக்கு மாத்திரமே இதற்கு விண்ணப்பிப்பதற்கான தகைமை உண்டு)

6.5 **உடல்சார் தகைமை** :- அனைத்துப் பரீட்சார்த்திகளும் தென் மாகாணத்தின் தென் மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவு உடலியல் ரீதியான மற்றும் உளவியல் ரீதியான தகுதியுடைவராக இருத்தல் வேண்டும்.

6.6 **வேறு** :-

**i.** விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

i. விண்ணப்பதாரி நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

ii. பரீட்சைக்குத் தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் திகதிக்கு முன்னர் ஐந்து ஆண்டுகளில் (05) விண்ணப்பதாரி கோருகின்ற மாவட்டத்தில் மூன்று (03) ஆண்டுகளில் தொடர்ச்சியாக நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

திருமணத்தின் பேரில் தென் மாகாணத்திற்கு வதிவிடத்தை மாற்றியுள்ள விண்ணப்பதாரிகள் எனின், பரீட்சைக்கான தகைமைகள் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் திகதிக்க முன்னர், துணைவரின் தென் மாகாண வதிவிடம் திருமணத் திகதியிலிருந்து 03 ஆண்டுகள் கடந்ததாக இருத்தல் வேண்டும்.

iv. பதவியில் ஆட்சேரப்புச் செய்வதற்காக அனைத்து தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென அழைப்பு அறிவித்தலில் குறிப்பிடப்படும் குறித்த தகைமைகள் அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

v. ஏதேனுமொரு சமயப் பிரிவுக்குரிய துறவிமார் எவருக்கும் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமை இல்லை.

**7.0** **பரீட்சை நடவடிக்கைமுறை** :- இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி தனக்குரிய மொழியைத் தெரிவு செய்ய வேண்டியதுடன், பரீட்சைக்குரிய அனைத்து வினாத்தாள்களுக்கும் குறித்த மொழியில் விடையளித்தல் வேண்டும். விண்ணப்பிக்கின்ற மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

| பாடங்கள் | நேரம் மணி | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|
| நுண்ணறிவு (Intelligece Quotient Test) | 01 மணித்தியாலயம் | 100 | 40% |
| விடயஞ்சார் தொழிநுட்ப பரீட்சை (Subjective Technical Test) | 02 மணித்தியாலயங்கள் | 100 | 40% |

**7.1 பரீட்சைக்குரிய பாடங்கள் கீழ்வருமாறு.**

**7.1 (அ) நுண்ணறிவுப் பரீட்சை**

பரீட்சார்த்தியிடமுள்ள பொது அறிவு, தர்க்க ரீதியான திறன், கருத்துத் தெரிவித்தல், எண்ணியல் திறன் மற்றும் புரிதல் திறன்களை அறிவு மட்டத்தைக் கணிக்கும் வினாப்பத்திரம்.

**7.1 (ஆ) விடயஞ்சார் தொழிநுட்ப பரீட்சை**

1.0 பிரயோக மின் அளவீடுகள்

1.1 SI அலகு முறைக்கமைய அடிப்படை அலகு, பிரமாணம் மற்றும் அடையாளங்கள்

1.2 தடை வகைப்படுத்தல், அளவீடு, உபகரணங்கள்

1.3 vspa ஆற்றல் அளவீடு, தொகுத்தறி அளவீடு

1.4 குறிவிசை வகைகள், கணிப்பீடு

1.5 தந்தி வழுக்கள், வழுக்களை அடையாளங் காணும் விதம்

1.6 முத்தறுவாய் மின்திறன் அளவீடு, அளவீட்டுக்கான உபகரணங்கள்

2.0 அடிப்படை மின்னியல்

2.1 ஒருதிசை மின்னோட்டம் ( Direct Current)

2.2 மாறுதிசை மின்னோட்டம் (AC)

3. 0 ஒருதறுவாய் மின்விநியோகத் தொகுதி மற்றும் முத்தறுவாய் மின்விநியோகத் தொகுதி

4.0 வீட்டு மின்கடத்தல் காப்பு வேலை, தொழிற்சாலை மின்கடத்தல் காப்பு வேலை, மற்றும் முத்தறுவாய் மின்கடத்தல் காப்பு வேலை

5.0 மின் பொறிகள்

5.1 இணைப்பு மாற்று, ஒருதிசை மின்பிறப்பாக்கி

5.2 மோட்டாருக்கான முத்தறுவாய் மின்விநியோகம்

5.3 உள்ளக எரியூட்டல் இயந்திரம்

5.4 முத்தறுவாய் கடத்தி மோட்டார், ஒருதறுவாய் கடத்தி மோட்டார், மூடிய மோட்டார், மூடிய மின்பிறப்பாக்கி, மின் மோட்டார் கோட்பாடு, சீரிசை அலை அசைவு

**8.0 பரீட்சைப் பெறுபேறுகள்** :- தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.psc.sp.gov.lk இன் மூலம் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தனித்தனியாக பதிவிறக்கம் செய்து கொள்ளக் கூடிய வகையில் பரீட்சைப்

பெறுபேறுகள் வெளியிடப்படுவதுடன், பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் தேர்ச்சி வரிசைக்கிரமத்திற்கமைய தயாரிக்கப்பட்டுள்ள பெயர்ப் பட்டியலொன்று நியமன அதிகாரிக்கு வழங்கப்படும்.

**9.0** பரீட்சைக் கட்டணம் :- பரீட்சைக் கட்டணம் ரூ. 1,000/- ஆகும். இணையவழி மூலமாக (Online) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். அனைத்துக் கொடுப்பனவுகளும் VISA அல்லது MASTER அட்டையின் மூலம் மாத்திரமே செலுத்தப்பட வேண்டியதுடன், அதுதவிர்ந்த வேறு முறைகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பரீட்சைக் கட்டணத்தின் முழுத்தொகையும் செலுத்தப்பட வேண்டியதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாக செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது இடம்பெறுகின்ற தவறுகளுக்கு தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு பொறுப்புக் கொண்டிராது.

எந்தவொரு காரணத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படாது எனவும், குறித்த கட்டணம் வேறெந்த பரீட்சைக்கும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**குறிப்பு 04 :-** விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி வரைக்கும் தாமதமாவதால் ஏற்படுகின்ற எந்தவொரு விளைவையும் விண்ணப்பதாரி பொறுப்பேற்றல் வேண்டும்.

**10.0 விண்ணப்பிக்க வேண்டிய முறை :-**

அனைத்து விண்ணப்பதாரிகளும் www.psc.sp.gov.lk எனும் தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பரீட்சையை சரியாகத் தெரிவு செய்து, ஏற்புடைய தகவல்களை உட்சேர்த்து பரீட்சைக் கட்டணம் செலுத்திய பின்னர் விண்ணப்பப் படிவத்தை தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு (Submit) செய்தல் வேண்டும். இப்பரீட்சைக்கான விண்ணப்பிக்கும் காலம் 2025 ஒக்றோபர் மாதம் 24 ஆம் திகதி பி.ப 6.00 மணியுடன் முடிவடையும். (இதற்காக இணைய வசதிகளுடன் கூடிய Desktop அல்லது Laptop கணணியைப் பயன்படுத்துவது மிகவும் பொருத்தமானதாகும்.)

10.1 விண்ணப்பதாரி இப்பரீட்சைக்கான தனது விண்ணப்படிவத்தை இணையவழி மூலமாக பூரணப்படுத்தல் வேண்டும்.

10.2 விண்ணப்பதாரிகளால் உட்சேர்க்கப்பட்டுள்ள எந்தவொரு தகவலும் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. அதனால், தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு (Submit) செய்வதற்கு முன்னர், குறித்த தகவல்களை நன்றாகப் பரீட்சிப்பது முக்கியமானதாகும்.

10.3 வேறு முறைகளால் சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். இப்பரீட்சைக்கு இணையவழி மூலமாக விண்ணப்பிக்கும் போது தவறான பரீட்சையைத் தேர்ந்தெடுத்தமை போன்ற தவறுகளால் ஏற்படும் நட்டங்களை தாங்களே பொறுப்பேற்றல் வேண்டும்.

10.4 தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு இணையவழி மூலமாக Submit செய்யப்படும் விண்ணப்பப் படிவங்கள் Download செய்யப்பட்டு அதன் வன்பிரதி (Hard Copy) 2025 ஒக்றோபர் மாதம் 24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் எந்தவொரு இணைப்பும் சேர்க்கப்படலாகாது. அதன் வன்பிரதி அனுப்பப்படும் கடித உறையில் இடதுபுற மேல் மூலையில் **"தென் மாகாண அரசாங்க சேவையின் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தர் (உயிர் சுகாதார) III ஆம் தரம்/பயிலுநர் தரப் பதவி ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2025"** என குறிப்பிடுவது கட்டாயமானதாகும்.

செயலாளர்,
தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
6 ஆவது மாடி, மாவட்டச் செயலகக் கட்டிடத் தொகுதி,
காலி.

10.5 **விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :**

தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்பிக்கப்படும் பதிவிறக்கம் செய்யப்பட்ட வன்பிரதியில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனுமொரு அரச நிறுவனத்தில் பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரி தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் மூலமும், அவ்வாறில்லாத விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர்/ஓய்வு பெற்ற அதிகாரி, கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படை பதவிநிலை அதிகாரி, அரச அல்லது மாகாண அரச சேவையில்அல்லது நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாராதிபதி அல்லது நாயக்க தேரர் அல்லது ஏனைய மதத்தலைவர் அல்லது குருமார் பதவிகொண்ட ஒருவர் மூலம் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

11.0 **பரீட்சை அனுமதி அட்டை :-**

இணையவழி மூலமாக கோரப்படுவதால், தகைமைகள் பரிசீலிக்கப்படாமல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் முற்கூட்டிய தீர்மானத்தின் அடிப்படையில் சரியான வகையில் பரீட்சைக் கட்டணம் செலுத்தி, குறித்த திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் இணையவழி மூலமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கு இத்திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.psc.sp.gov.lk இன் மூலம் அனுமதி அட்டை வழங்கப்பட்டுள்ளது. அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன், அதனை தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ பொது அறிவித்தல் மூலம் வெளியிடப்படும். அதற்கமைய, இணையத்தளத்திலுள்ள பரீட்சை அனுமதி அட்டை எனும் கருமபீடத்தை அணுகி தமது அடையாள அட்டை இலக்கத்தை உட்சேர்த்து பரீட்சை அனுமதி அட்டையை பதிவிறக்கம் செய்யலாம்.

அனுமதி அட்டையைப் பரிசீலித்து திருத்தங்கள் இருப்பின் குறித்த நிரலில் திருத்தப்பட வேண்டிய விதத்தைச் சரியாகக் குறிப்பிட்டு விண்ணப்பதாரி கையொப்பமிடல் வேண்டும். நேர்முகத் தேர்வின் போது திருத்தங்களுக்கு முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படாது.

பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையை வழங்கும் போது விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளாரென ஏற்றுக்கொள்ளப்படாது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பதிவிறக்கம் செய்யப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையை A4 அளவு கடதாசியில் இரண்டு பக்கங்களைப் பயன்படுத்தி பிரதியிட்டு கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தி பரீட்சை மண்டப மேற்பார்வை தலைமையதிபதி அவர்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். ஏதேனுமொரு அரச நிறுவனத்தின் மூலம் விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை நிறுவனப் பிரதானி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி மூலமும், அவ்வாறில்லாத விண்ணப்பதாரிகள் அரசாங்க பாடசாலை அதிபர்/ஓய்வு பெற்ற அதிகாரி, கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படை பதவிநிலை அதிகாரி, அரச அல்லது மாகாண அரச சேவையில்அல்லது நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாராதிபதி அல்லது நாயக்க தேரர் அல்லது ஏனைய மதத்தலைவர் அல்லது குருமார் பதவிகொண்ட ஒருவர் மூலம் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

12.0 **பரீட்சையில் தோற்றுதல்**

(அ) பரீட்சையில் தோற்றுகின்ற விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை முதலாவது குறித்த மண்டபத்தில் பரீட்சைத் தினத்தன்று பரீட்சை நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள மண்டப பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகளுக்கு பரீட்சையில் தோற்றுவதற்கு இடமளிக்கப்படாது.

(ஆ) பரீட்சார்த்தி தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சையில் தோற்ற வேண்டும்.

13.0 **பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :-**

அனுமதி அட்டையின்றி எந்தவொரு விண்ணப்பதாரியும் பரீட்சையில் தோற்றுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது. மேலும், பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் தாம் பரீட்சைக்குத் தோற்றும் சகல பாடங்களுக்காகவும் மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஏதேனுமொரு ஆவணத்தை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i.) தேசிய அடையாள அட்டை

(ii.) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

(iii.) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

அதேபோன்று பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் மற்றும் தகவல் தொடர்பாடல் உபகரணங்கள் பயன்பாட்டில் இல்லாததினை உறுதிப்படுத்தும் வகையில் தமது முகம் காதுகள் இரண்டும் மூடப்படாத விதத்தில் பரீட்சை மண்டபத்துக்கு உட்பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்துக்குள் நுழைந்த சந்தர்ப்பத்தில் இருந்து பரீட்சை நிறைவுற்று பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியேறும் வரை பரீட்சார்த்திகள் தமது முகமும் காதுகள் இரண்டும் மூடப்படாத விதத்தில் இருத்தல் வேண்டும்.

14.0 **தெரிவு செய்யும் முறை :-** இப்பதவிக்கு பரீட்சையில் வெளிக்காட்டிய திறமைகளுக்கமைய நடாத்தப்படும் தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்கான நேர்முகத்தேர்வின் (புள்ளிகள் வழங்கப்படமாட்டாது) பின்னர் தகைமையுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். (நியமனம் வழங்கும் போது நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய நியமனங்கள் வழங்கப்பட வேண்டிய இறுதி முன்னுரிமை மட்டத்தில் சமமான புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் பலர் இருக்கின்ற சந்தர்ப்பத்தில் நேர்முகத் தேர்வை நடாத்தி கல்வித் தகைமைகளுக்கமைய உயர் தகைமைகளைக் கொண்டிருப்பவர்களின் வரிசைக்கிரமமாகத் தேர்ந்தெடுக்கப்படுவர்)

15.0 **போலித் தகவல் வழங்குவதற்கான தண்டனை :-** ஏதேனுமொரு விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை இல்லையென அறியக் கிடைத்தால் பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்தில் அல்லது பரீட்சைக்குப் பின்பு அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் விண்ணப்பம் இரத்துச் செய்யப்படுவதற்கு தென்மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உண்டு. மேலும், விண்ணப்பதாரி முன்வைத்துள்ள ஏதேனும் ஒரு விடயம் போலி என அறிந்து முன்வைத்திருப்பதாக அறியக் கிடைத்தால் அல்லது அவர் வேண்டுமென்றே ஏதேனுமொரு முக்கிய விடயத்தை மறைத்திருந்தால் அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

i. விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும் போது மிகவும் கவனமாக உண்மைத் தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சைக்குரிய ஒழுங்குவிதிகளுக்கமைய ஏதேனுமொரு பரீட்சார்த்தி அதில் தோற்றுவதற்கு தகைமையற்றவர் என தெரிய வந்தால், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது அதற்கு பின்பு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் பரீட்சையில் தோற்றுவதை இரத்துச் செய்வதற்கான அதிகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உண்டு.

ii. பரீட்சார்த்தி ஒருவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிற்காலத்தில் தவறென தெரியவந்தால், அவர் திட்டமிட்டு ஏதேனுமொரு விடயத்தை மறைத்திருப்பது தெரிய வந்தால், அவருக்கு நியமனம் வழங்கப்படமாட்டததுடன், இப்பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட நியமனத்தை இரத்துச் செய்வதற்கு அல்லது அரச சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்படுவார்.

16.0 பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் பற்றி தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் இணங்கியொழுகுதல் வேண்டும். குறித்த ஒழுங்குவிதிகள் மீறப்பட்டால் தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவால் விதிக்கப்படுகின்ற எந்தவொரு தண்டனைக்கும் ஆளாதல் வேண்டும்.

17.0 பரீட்சையை நடாத்துதல், பரீட்சையை இரத்துச் செய்தல் அல்லது பரீட்சைப் பெறுபேறுகளை இடைநிறுத்தல் அல்லது அதனுடனான விளைவாய்ந்தவையான பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடுகள் குறிப்பிடப்படாத வேறெந்த விடயம் பற்றியும் தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் முடிவே இறுதி முடிவாகும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுப் பரீட்சை ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

18.0 இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலமான அறிவித்தல்களில் இணக்கமற்ற தன்மைகள் ஏற்பட்டால், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள அறிவித்தல் ஏற்புடையதாகும்.

தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆணைப்படி,

**சீ.பீ.ராஜகருணா**
செயலாளர்
தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு

C.P. Rajakaruna
Secretary
Provincial Public Service Commission
Southern Province

2025 ஒக்றோபர் 03 ஆம் திகதி,
தென்மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
6 ஆவது மாடி,
மாவட்டச் செயலகக் கட்டிடத்தொகுதி,
காலி

(இவ்வறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நிறுவனங்கள் போலியாகத் தயாரித்து முன்வைக்கின்ற விளம்பரங்களில் குறிப்பிடப்படும் விடயங்களுக்கு தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு எந்தவித பொறுப்பையும் கொண்டிருக்காது)